சுருக்கம்

பெயரிடுதல் – மேட்டுப்பாளையம் நகராட்சி – சங்கர் நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளி – தனியார் நிதியுதவி மூலம் தனியார் நிறுவனத்தால் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது – பள்ளியின் பெயரை “பகவான் மகாவீர் நகராட்சிப் பள்ளி” எனப் பெயர் மாற்றம் செய்ய அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி5) துறை

அரசாணை (நிலை) எண்.196 நாள்:13.10.2009

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 573, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் துறை, நாள். 11.12.2001.
2. அரசாணை (நிலை) எண். 96, பள்ளிக் கல்வி (இ1) துறை, நாள். 22.6.2006.

மேலும் படிக்க:

3. மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்றத் தலைவர் கடிதம் நாள். 5.3.2009.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண். 57183/ 2008 /எம்.1, நாள். 8.6.2009.

---

ஆணை:

நகராட்சி நிர்வாக இயக்குநர் நான்காவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், மேட்டுப்பாளையம் நகராட்சியில் இயங்கி வரும் நகராட்சி துவக்கப்பள்ளிக்கு (தற்போது நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது) திருவாளர்கள் எம்.பவர்லால் & சன்ஸ் என்னும் தனியார் நிறுவனம், ரூ.12.00 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு, மேற்படி நகராட்சி நடுநிலைப் பள்ளிக்கு ‘‘பகவான் மகாவீர் நகராட்சிப் பள்ளி’’ எனப் பெயர் மாற்றம் செய்து, நன்கொடையாளரின் பெயரைக் கல்வெட்டில் பதியக் கேட்டுக் கொண்டதையடுத்து, மேட்டுப்பாளையம் நகர்மன்றமும் தனது தீர்மானம் எண்.532, நாள் 29.01.2008–ல் மேற்படி கட்டிடப் பணிகள் முடிவுற்றவுடன், நகராட்சி பள்ளியின் பெயரை, ‘‘பகவான் மகாவீர் நகராட்சிப் பள்ளி’’ எனப் பெயர் மாற்றம் செய்ய அனுமதி வழங்கலாம் எனத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

..2

2. சென்னை உயர்நீதிமன்றம் திரு.V.R.ஒதிசாமி என்பவர் தொடுத்த நீதிப்பேராணை எண். 6884/03–இல் 16.9.2004 நாளன்று அளித்த தீர்ப்பில் "திருவாளர்கள் பவர்லால் மற்றும் சன்ஸ், எண்.235 பிரதான சாலை மேட்டுப்பாளையத்தில், சங்கர் நகர் நகராட்சி துவக்கப்பள்ளியின் கட்டிடம் கட்டும் பணியை தொடங்குவதற்கு, மூன்றாவது பிரதிவாதி நகராட்சி ஆணையர், மேட்டுப்பாளையம் நகராட்சி அனுமதி அளிக்கும்போது, அக்கட்டிடப் பணிகள் முழுவதும் முடிந்ததை, நகராட்சி அதிகாரிகள் ஆய்வு செய்தபின் அந்த பள்ளியின் பெயரை "பகவான் மகாவீர் நகராட்சிப் பள்ளி" என பெயர் மாற்றம் செய்ய அனுமதி அளிக்கப்படும் என தெளிவாக்கி இருப்பது இந்நீதிமன்றத்திற்கு தெரிகிறது என்றும், இதுகுறித்த உடன்பாட்டின் அடிப்படையில்தான் நன்கொடையாளர் அப்பள்ளியின் கட்டிடத்தை கட்டி முடித்திருக்கிறார் என்பதால், மேற்படி பள்ளிக்கு "பகவான் மகாவீர் நகராட்சிப் பள்ளி" என பெயர் மாற்றம் செய்ய வேண்டுமெனவும், இப்பெயர் மாற்றத்தினை ஒருவாரக் காலத்திற்குள் செயல்படுத்த வேண்டும் எனவும் கட்டளையிட்டுள்ளது. இவ்வாணையை எதிர்த்து மேட்டுப்பாளையம் நகராட்சி தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தனிப்பட்ட நிறுவனங்கள் நகராட்சி பள்ளிகளுக்கு நிதி வழங்கி, பள்ளிகளின் நிலையை மேம்படுத்துவதை பாராட்டும் வகையில், நகராட்சி பள்ளிகளுக்கு நன்கொடையாளர்களின் பெயர்களை சூட்டினால், மற்ற நன்கொடையாளர்களுக்கு இச்செயல் ஒரு ஊக்குவிப்பாக அமையும் என்பதாலும், எம்.பவர்லால் அண்டு சன்ஸ் என்னும் தனியார் நிறுவனம், ரூ.12.00 இலட்சம் செலவில் மேற்படி பள்ளிக்கு மேம்பாட்டுப் பணிகளை செய்துள்ளதாலும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையிலிருந்து விலக்களித்து, சிறப்பினமாக கருதி, மேட்டுப்பாளையம் நகராட்சி, சங்கர்நகர், நகராட்சி நடுநிலைப் பள்ளியின் பெயரை "பகவான் மகாவீர் நகராட்சிப் பள்ளி" எனப் பெயர் மாற்றம் செய்யப் பரிந்துரை செய்துள்ளார்.

4. பள்ளிக்கல்வித் துறை மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அரசுப் பள்ளிகளில் தங்கள் சொந்த செலவில் கட்டிடங்களை கட்டிக் கொடுக்க முன்வரும் நன்கொடையாளர்கள் விரும்பும் பெயரை அந்த கட்டிடத்தில் அரசின் அனுமதி பெற்றுப் பொறித்துக் கொள்ள அனுமதித்துள்ளது.

5. மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. நீதிப்பேராணை எண். 6884/03–ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலும், மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தினால் இயற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலும், நகராட்சிப் பள்ளிகளுக்கு நிதி வழங்கி பள்ளிகளின் நிலையை மேம்படுத்துவதை பாராட்டும் வகையிலும், பள்ளிகளுக்கு நன்கொடையாளர்

பெயரை சூட்டினால் அது மற்ற நன்கொடையாளர்களை ஊக்குவிப்பதாக அமையும் என்பதாலும், இந்நேர்வினை சிறப்பினமாகக் கருதி, மேட்டுப்பாளையத்திலுள்ள சங்கர் நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளியினை "பகவான் மகாவீர் நகராட்சிப் பள்ளி" எனப் பெயர் மாற்றம் செய்ய, மேட்டுப்பாளையம் நகர்மன்றத் தலைவருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன்மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை– 600 005.
மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் மாவட்டம்.
நகராட்சி ஆணையர், மேட்டுப்பாளையம் நகராட்சி, கோயம்புத்தூர் மாவட்டம். (நகர்மன்றத் தலைவர் வழியாக)
மாவட்ட கல்வி அலுவலர், ராஜவீதி, கோயம்புத்தூர்.
மாவட்ட உதவி தொடக்க கல்வி அலுவலர், கோயம்புத்தூர்.
தலைமைக் கணக்காயர், சென்னை– 35 / 18.
தலைமைப் பொறியாளர்,(கட்டிடம்), பொதுப்பணித் துறை, சென்னை–5.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலக தனிச் செயலர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலக தனிச் செயலர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலரின் தனிச் செயலர், சென்னை– 600 009.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை– 600 009.
உயர்கல்வித் துறை, சென்னை– 600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துணை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி // அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.